முதல் கூடுதல் அமர்வு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்

முன்னிலை:- திருமதி.எஸ்.எழில், எம்.எல்.,

முதல் கூடுதல் அமர்வு நீதிபதி,

2026 ம் வருடம் மார்ச் மாதம் 26 ம்நாள் வியாழக்கிழமை

(திருவள்ளுவராண்டு 2057-ஸ்ரீ விசுவாவசு வருடம்-பங்குனித் திங்கள் 12 ம்நாள்)

பல்வகை மனு எண்கள்.1/2025 மற்றும் 2/2025
குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு வழக்கு எண்.13/2021

பல்வகை மனு எண்கள்.1/2025

1. பி.லோகநாயகி (வயது 32),
க/பெ. எஸ்.பிரபு,
த/பெ.கே.பரமேஷ்,

2. இளவர் பி.விதுலா (வயது 9),
த/பெ. எஸ்.பிரபு,
(இளவருக்காக அவரது தாயார்
பி.லோகநாயகி)

3. இளவர் பி.ஸ்ரீ சக்தி (வயது 7),
த/பெ. எஸ்.பிரபு,
(இளவருக்காக அவரது தாயார்
பி.லோகநாயகி)
(மனுதாரர்கள் வசிக்குமிடம்
கதவு எண்.2/356,
லோகநாதன் குவார்ட்டர்ஸ்,
மேட்டுப்புதூர்,
விஜயமங்கலம் அஞ்சல்,
ஈரோடு-638 056) .. மனுதாரர்கள்/எதிர்மேல்
-முறையீட்டாளர்கள்

// எதிர் //

1. எஸ்.பிரபு (வயது 37),
த/பெ.ஆர்.சுப்ரமணியன்,
2. ஆர்.சுப்ரமணியன் (வயது 73),
த/பெ.லேட்.ராமசாமி,
3. எஸ்.சரஸ்வதி (வயது 67),
க/பெ.ஆர்.சுப்ரமணியன்,
(எதிர்மனுதாரர்கள் வசிக்குமிடம்
-கதவு எண்.40/35, கிருஷ்ணமா

நாயுடு 2 வது வீதி, ஒண்டிப்புதூர்,
கோயம்புத்ர்-641 016) .. எதிர்மனுதாரர்கள்/
மேல்முறையீட்டாளர்கள்

26.11.2025 தேதியிட்ட இம்மனு மனுதாரர்கள்/எதிர்மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர்கள் தரப்பு கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்வதற்காக மேல்முறையீட்டை மறுதிறப்பு செய்து உத்தரவிட வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

<u>பல்வகை மனு எண்கள்.2/2025</u>

1. பி.லோகநாயகி (வயது 32),
க/பெ. எஸ்.பிரபு,
த/பெ.கே.பரமேஷ்,

2. இளவர் பி.விதுலா (வயது 9),
த/பெ. எஸ்.பிரபு,
(இளவருக்காக அவரது தாயார்
பி.லோகநாயகி)

3. இளவர் பி.ஸ்ரீ சக்தி (வயது 7),
த/பெ. எஸ்.பிரபு,
(இளவருக்காக அவரது தாயார்
பி.லோகநாயகி)
(மனுதாரர்கள் வசிக்குமிடம்
கதவு எண்.2/356,
லோகநாதன் குவார்ட்டர்ஸ்,
மேட்டுப்புதூர்,
விஜயமங்கலம் அஞ்சல்,
ஈரோடு-638 056) .. மனுதாரர்கள்/எதிர்மேல்முறை
- யீட்டாளர்கள்

// எதிர் //

1. எஸ்.பிரபு (வயது 37),
த/பெ.ஆர்.சுப்ரமணியன்,
2. ஆர்.சுப்ரமணியன் (வயது 73),
த/பெ.லேட்.ராமசாமி,
3. எஸ்.சரஸ்வதி (வயது 67),
க/பெ.ஆர்.சுப்ரமணியன்,
(எதிர்மனுதாரர்கள் வசிக்குமிடம்
-கதவு எண்.40/35, கிருஷ்ணமா

நாயுடு 2 வது வீதி, ஒண்டிப்புதூர்,
கோயம்புத்ர்-641 016) .. எதிர்மனுதாரர்கள்/
மேல்முறையீட்டாளர்கள்

26.11.2025 தேதியிட்ட இம்மனு மனுதாரர்கள்/எதிர்மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை கூடுதல் ஆவணங்களாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

இந்த இரண்டு மனுக்களும் இந்நீதிமன்றத்தின் முன்பாக 18.03.2026 ம்தேதி ஒருசேர இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இரண்டு மனுக்களிலும் மனுதாரர்கள் தரப்பில் திரு.எஸ்.மகாராஜசேகர், வழக்கறிஞர் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.பி.சுரேஷ், வழக்கறிஞர் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு தரப்பு வாதுரைகளை ஒருசேரக் கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

<u>பொது உத்தரவு</u>

மனுதாரர் தரப்பு கூடுதல் ஆவணங்களைத் தாக்கல் செய்வதற்காக மேல்முறையீட்டை மறுதிறப்பு செய்யக் கோரியும் மற்றும் மனுதாரர் தரப்பு கூடுதல் ஆவணங்களை ஏற்றுக் கொள்ளக் கோரியும் மனுதாரர்களால் இந்த இரண்டு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>இரண்டு மனுக்களிலும் மனு உரையின் சுருக்கம்:</u>

1 ம் மனுதாரர் தனக்காகவும் 2, 3 இளவர் மனுதாரர்களுக்காகவும் பிரமாண பத்திரத்தை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள் மேல்முறையீட்டில் எதிர்மேல்முறை -யீட்டாளர்கள். எதிர்மனுதாரர்கள் விசாரணை நீதிமன்றம் வழங்கிய இடைக்கால ஜீவனாம்ச உத்தரவை எதிர்த்து மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்கள். மேல்முறையீடு இருதரப்பிலும் வாதுரை கேட்கப்பட்டு 02.12.2025 ம் தேதி உத்தரவுக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மேல்முறையீட்டில் பரிசீலனை செய்ய வேண்டிய முக்கியமான சங்கதிகள் யாதெனில், 1 ம் எதிர்மனுதாரரின் வருமானத்தைக் குறித்து முடிவு செய்யப்பட வேண்டும். ஏற்கனவே விசாரணை நீதிமன்றத்தில் சில ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவை யாவும் இந்த மேல்முறையீட்டுக்கு அவசியமானவை. மேற்படி ஆவணங்கள் இந்த மேல்முறையீட்டில் கூடுதல் ஆவணங்களாக தாக்கல் செய்ய

வேண்டியிருப்பதால் மேற்படி ஆவணங்களை இம்மேல்முறையீட்டில் ஏற்றுக் கொள்ள மேல்முறையீட்டை மறுதிறப்பு செய்ய வேண்டும்.

3. <u>இரண்டு மனுக்களிலும் எதிர் உரையின் சுருக்கம்:-</u>

மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல, இந்த எதிர்மனுதாரரால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளைத் தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். இம்மனு பிரிவு 94**BNSS Act** 2023 ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தவறானது. காலம் கடந்து இம்மனு தாக்கல் செய்துள்ளார்கள். 1 ம் எதிர்மனுதரரின் வருமானத்தைக் குறித்து ஆவணங்களைத் தாக்கல் செய்ய இருப்பதாகச் சொல்லப்படுவது தவறு. விசாரணை நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. மேல்முறையீடு உத்தரவுக்காக போடப்பட்டுள்ள நிலையில் ஆவணங்களைத் தாக்கல் செய்வதாகக் கூறுவது ஏற்கத்தக்கத்தல்ல. குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு இம்மனு தாக்கல் செய்யப் -பட்டுள்ளது. இம்மனு தள்ளுபடி செய்ய வேண்டும். இம்மனு ஆவணங்கள் அனைத்தும் மனுதாரர்களும் எதிர்மனுதாரர்களும் ஒன்றாக வாழ்ந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் ஆகும். மேற்படி இன்சூரன்ஸ் பாலிசிகள் அனைத்தும் தற்போது நடைமுறையில் இல்லை. 1 ம் எதிர்மனுதாரருக்கு மேற்படி தவணைத் தொகையை செலுத்தும் அளவுக்கு வருமானம் இல்லை. ஆவணம் எண்.2 பாலிசியானது 2013 ல் போடப்பட்டதாகும். அதற்கு புதுப்பிக்கும் தொகை செலுத்தப்படவில்லை. அப்போது 1 ம் எதிர்மனுதாரரின் மாதச் சம்பளம் ரூ.7,000/- மட்டுமே. ஆவண எண்.1 ஸ்ரீராம் பாலிசி மற்றும் இதர பாலிசிகள் கோவிட்-19 காலத்திற்கு முன்பாகவே முடிவடைந்துவிட்டது. கொரோனா கால கட்டத்தில் 1 ம் எதிர்மனுதாரருக்கு வியாபாரம் இல்லை. அவர் பழ விற்பனை செய்யும் தொழில் செய்து வருமானம் ஈட்டி மனுதாரர்களையும் வயதான பெற்றோரையும் பராமரித்து வந்தார். ஒர்க் ஷாப்பிற்கு வாடகை கூட கட்ட முடியாத வறுமையில் இருந்தார். 1 ம் மனுதாரர் கோபத்தில் அவருடைய போனை உடைத்துவிட்டார். 1 ம் எதிர்மனுதாரர் வேறு போன் வாங்க இயலாத நிலையில் குழந்தைகளுக்கான இணைய வழிப் பாடம் கற்க முடியாமல் போனது. மேற்படி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் 2020 ம் வருடத்திலிருந்து மனுதாரர்கள் வசம் இருந்த நிலையில், அதனை தற்போது தாக்கல் செய்வது ஏற்கத்தக்கதல்ல. தாக்கல் செய்வதற்கு சொல்லப்படும் காரணங்கள் ஏற்கத்தக்கதல்ல. 1 ம் எதிர்மனுதாரர் வெங்கடேஸ்வரா மோட்டார்ஸ் என்ற பெயரில் கார் ஒர்க் ஷாப் மட்டுமே நடத்தி வருகிறார். அதில் அரையாண்டு வருமானம் ரூ.21,001/- மட்டுமே. 1 ம் எதிர்மனுதாரர்

ஈரோடு கார்ப்பரேசனுக்கு வரி செலுத்தி வருகிறார். அவருக்கு குறைவான வருமானமே வருகிறது. அது 1ம் மனுதாரருக்கு நன்கு தெரியும். மேற்படி பொருளாதார சிக்கலின் மத்தியில் 1ம் எதிர்மனுதாரருக்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளது. அதனால் 1ம் எதிர்மனுதாரரால் ஒர்க் ஷாப்பை நடத்த கடன் வாங்கியுள்ளார். அதற்கு மாதம் ரூ.10,000/- செலுத்தி வருகிறார். 1ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு ரூ.5,000/- மட்டுமே கொடுக்கும் அளவுக்கு வருமானம் உடையவர். 1ம் எதிர்மனுதாரர் 2, 3 எதிர்மனுதாரர்களான பெற்றோரை பராமரிக்க கடமைப்பட்டவர். அவர்களுக்கு மாதம் ரூ.3,500/- மருத்துவச் செலவு ஏற்படுகிறது. சில நேரங்களில் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும்போது ரூ.10,000/- முதல் ரூ.15,000/- வரை செலவு ஆகிறது. எனவே, 1ம் எதிர்மனுதாரர் கடன் வாங்கிதான் குடும்பத்தை நடத்தி வருகிறார்.

4. 1ம் மனுதாரர் பொய்யானச் சங்கதிகளைக் கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர் வழக்கு வாய்தாவிற்கு ஒவ்வொரு முறையும் கோவையிலிருந்து ஈரோட்டிற்கு அலைக்கழிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். அதற்கான போக்குவரத்துச் செலவு மற்றும் வழக்கறிஞர் செலவு ஆகியவற்றைச் செலுத்த இந்த எதிர்மனுதாரருக்கு பொருளாதார வசதியில்லை. மேலும் மாதத்தில் 8 முதல் 10 முறை நீதிமன்றத்திற்கு ஆஜராக வேண்டியுள்ளது. ஆவணம் எண்.5 யூனியன் பேங்க் ஆப் இண்டியா கணக்குப் பட்டியலின்படி 1ம் எதிர்மனுதாரரால் செலுத்தப்பட்ட தொகைகளாக உள்ளது. அவைகளை நீதிமன்றம் கருத்திற்கொள்ள வேண்டும். 1ம் மனுதாரரின் சகோதரர் வழக்கறிஞராக பணிபுரிந்து பின்னிட்டு அரசு வேலையில் உள்ளார். 1ம் மனுதாரரும் அவருடைய சகோதரரும் பெற்றோருடன் ஒரே வீட்டில் வசித்துக் கொண்டு நீதிமன்றத்தை ஏமாற்றும் எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். வாடகை ஒப்பந்தம் தாக்கல் செய்யப்படவில்லை. 1ம் மனுதாரருக்கு சமைக்கும் எண்ணம் இல்லை. 1ம் மனுதாரர் கோபத்தில் குழந்தைகளைத் தாக்குவார். அவ்வாறு தாக்கியதில் 1ம் எதிர்மனுதாரர்தான் குழந்தைகளை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வார். 1ம் எதிர்மனுதாரர் எச்சரித்தும் அவருடைய செயலை மாற்றிக் கொள்ளவில்லை. அடுத்த நாள் சிங்காநல்லூர் காவல்நிலையத்தில் 1ம் மனுதாரரின் குடும்பத்தினர் பொய் புகார் கொடுத்து அதனடிப்படையில் இந்த 1ம் எதிர்மனுதாரர் காவல்நிலையத்தில் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார். இதற்கிடையில் 1ம் மனுதாரரின் சகோதரரின் நண்பர் மகாராஜா என்பவரும் மற்றொரு நபரும் இந்த 1ம் எதிர்மனுதாரரின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து பூட்டை உடைத்து பீரோவில் இருந்த ஆவணங்கள்,

குழந்தைகளின் ஆவணங்கள், கல்லூரிச் சான்றிதழ், அனுபவ சான்றிதழ், இன்சூரன்ஸ் நகல், பாஸ்போர்ட் மற்றும் துணிகள் ஆகிய அனைத்தையும் எடுத்துச் சென்றுவிட்டார்கள். இவ்வாறான செயல் சட்டப்படியானதல்ல, குற்றவியல் நடவடிக்கைக்குட்பட்டது. 1ம் எதிர்மனுதாரர் கத்தாரில் பணிபுரிந்தார். அது தற்போது சான்றிதழ் இல்லாததால் செல்ல இயலாது. அதனால் ஒர்க் ஷாப்பில் வேலை செய்கிறார். அதனால் 1ம் எதிர்மனுதாரரால் மனுதாரர்கள் கோரும் ஜீவனாம்ச தொகையை கொடுகக இயலாது. நீதிமன்றத்தால் ரூ.5,000/-ஐ மனுதாரர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப் -பட்டுள்ளது. அதில் குழப்பம் எதுவும் இல்லை. தலா ரூ.5,000/- ஒவ்வொருவருக்கும் என்று குறிப்பாகச் சொல்லப்படவில்லை. மொத்தம் ரூ.5,000/-ஐ நாளது வரை இந்த 1ம் எதிர்மனுதாரரால் செலுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, மனுதாரர்கள் அசல் மனுவை நடத்தால் காலதாமதம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்திலும் எதிர்மனுதாரர்களுக்கு கஷ்ட நஷ்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்திலும் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இந்த இரண்டு மனுக்களும் அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இந்த இரண்டு மனுக்களிலும் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

5. <u>பிரச்சினைக்குத் தீர்வு</u>

இம்மனுவின் மனுதாரர்கள் டி.வி.ஏ.2/2020 என்ற வழக்கை எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளதில் குற்றவியல் பல்வகை மனு எண்.2243/2020ல் மாதம் ரூ.5,000/-ஐ மனுதாரர்களுக்குச் செலுத்த வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவில் மனுதாரர்களுக்கு தலா ரூ.5,000/-? அல்லது 3 மனுதாரர்களுக்கும் சேர்த்து ரூ.5,000/-? என்பதைக் குறித்து உத்தரவில் குறிப்பாக சொல்லப்படவில்லை. 1ம் எதிர்மனுதாரர் மாதம் ரூ.5,000/ செலுத்த வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவில் சந்தேகமடைந்த எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களுக்கு மாதம் ரூ.5,000/- வழங்க உத்தரவிட வேண்டுமென்று இந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்கள். இந்த மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் 1ம் எதிர்மனுதாரரின் வருமானம் சம்பந்தமான பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை இருதரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. தற்போது மனுதாரர் தரப்பில் சில ஆவணங்கள் 1ம் எதிர்மனுதாரரின் சொத்து மற்றும் வருமானம் சம்பந்தப்பட்ட சில ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவற்றைக் குறியீடு செய்ய வேண்டுமென்றும் சொல்லப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல்

செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் இன்சூரன்ஸ் பாலிசிகள் மற்றும் 1 ம் மனுதாரர் பெயரில் உள்ள யூனியன் பேங்க் ஆப் இண்டியா வங்கி கணக்குப் புத்தகம் ஆகியவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி ஆவணங்களை ஏற்றுக் கொள்வதில் கடுமையான ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொள்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையாகக் கொண்டுதான் 1 ம் எதிர்மனுதாரரின் வருமானத்தை நிர்ணயம் செய்ய முடியும். விசாரணை நீதிமன்றத்தில் இருதரப்பிலும் Assets and Liabilities தாக்கல் செய்யப்படவில்லை. 1 ம் எதிர்மனுதாரர் மெக்கானிக் ஒர்க் ஷாப் வைத்து நடத்தி தொழில் செய்து வருவதாகவும் அதில் வருமானம் இல்லை என்றும் கூறியுள்ளார். மேலும், இருதரப்பிலும் இம்மனுவில் Assets and Liabilities தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை குறியீடு செய்யும் பட்சத்தில் 1 ம் எதிர்மனுதாரரின் வருமானம், பாலிசி வைப்பீடுகள், பாலிசிகளுக்கு செலுத்துவதற்கான தொகை ஆகியவற்றைக் குறித்து பரிசீலனை செய்ய இயலும். எனவே, மேற்படி இரண்டு அனுமக்களையும் அனுமதிப்பதால் 1 ம் எதிர்மனுதாரருக்கு கஷ்ட நஷ்டம் ஏற்பட வாய்ப்பில்லை என்று முடிவு செய்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, இந்த இரண்டு மனுக்களையும் அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த பொது உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு ஒலிவடிவில் சொல்லப்பட்டு, அவரால் வரி வடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ம் வருடம் மார்ச் மாதம் 26 ம் நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S EZHIL

Digitally signed by S EZHIL
Date: 2026.03.26 19:21:25 +0530

முதல் கூடுதல் அமர்வு நீதிபதி,
ஈரோடு

அசல்/வரைவு பொது உத்தரவு
குப.மனு எண்கள்.1, 2/2025
கு.மே.மு.வ.எண்.13/2021
நாள் 26.03.2026.
மு.கூ.அ.நீ.ம., ஈரோடு.